# அமரர் மரியசேவியர் அடிகளாரின் திருப்பாடுகளின் காட்சிகள் வழியான அறிவுருவாக்கம்

*அருட்பணியாளர் ம. வி. இ. இரவிச்சந்திரன்*
முதுநிலை விரிவுரையாளர்
கிறித்தவ நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

அமரர் மரியசேவியர் அடிகளார் "கலைவழி இறைபணி" என்ற விருதுவாக்கோடு திருமறைக் கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவி ஐம்பது வருடங்களுக்கும் மேலாக கலைவழியாக பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வந்தவர். தமது படைப்புக்கள் வழியாக அவர் வெறுமனே சமயக் கருத்துருவாக்கத்தை மட்டுமல்ல சிறந்த சமூக அறிவுருவாக்கத்தையும் செய்து வந்தார். அந்த வகையில் திருப்பாடுகளின் காட்சி (Passion Play) என்னும் கலை வடிவம் வழியாக அவர் மேற்கொண்ட சமய சமூக அறிவுருவாக்க முயற்சிகளை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருப்பாடுகளின் காட்சி என்னும் கலை வடிவம்

திருப்பாடுகளின் காட்சி அல்லது நாடகம் என்னும் கலை வடிவம் மத்திய கால ஐரோப்பாவில் கிறிஸ்தவ சடங்குகளில் இருந்தே ஆரம்பமானதாகக் கருதப்படுகிறது. (ஞா. பிலேந்திரன், *2001, ப.83*). ஜெர்மன் மொழியிலேயே இந்நாடகங்கள் ஆரம்பத்தில் மேடையேற்றப்பட்டன. ஒரு கொள்ளை நோயின் போது மேற்கொள்ளப்பட்ட பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மேடையேற்றுவோம் என்ற நோன்புறுதி காரணமாக ஜெர்மனியின் ஒபரமர்காவு என்னும் இடத்தில் *1634*இல் இருந்து இன்றுவரை மேடையேற்றப்பட்டு வரும் திருப்பாடுகளின் காட்சியானது உலகப் புகழ் பெற்றது. (ஞா. பிலேந்திரன், *2001, ப.88*)

## இலங்கையில் திருப்பாடுகளின் காட்சி

போர்த்துகேயர் இலங்கையில் கால் பதித்த பின்பு இங்கு வந்த இயேசு சபை மறைப்பணியாளரே முதன்முதலாக மரப்பொம்மைகளால் நிகழ்த்தப்படும் கிறிஸ்துவின் பாடுகளின் காட்சியை அறிமுகம் செய்தனர்.

மனிதர்களால் நடிக்கப்படும் பாடுகளின் காட்சி தென்னிலங்கையில் 1923இல் சிங்கள மொழியிலும் வட இலங்கையில் 1952இல் தமிழ்மொழியிலும் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. தொடர்ந்து பல இடங்களிலும் தபக்காலத்தில் திருப்பாடுகளின் நாடகம் மேடையேற்றப்பட்டு வந்தது. ஆயினும் இவை ஆங்கில மொழியில் காணப்பட்ட பிரதிகளின் மொழிபெயர்ப்புக்களாகவே காணப்பட்டன.

### அமரர் மரியசேவியர் அடிகளாரின் பாடுகளின் காட்சி

மரியசேவியர் அடிகளார் மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாக இருந்த பொழுது முதன்முதலாக தமிழில் தானே எழுத்துருச் செய்த பாடுகளின் காட்சியை 1964இல் மேடையேற்றினார். பின்பு 1966இல் உரும்பிராய் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்ட போது அங்கிருந்த இளைஞர்களை இணைத்து "கல்வாரியில் கடவுள்" என்னும் திருப்பாடு களின் நாடகத்தினை மேடையேற்றினார். இங்குதான் அவர் திருமறைக் கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவினார். இவ்வாறு ஆரம்பித்த அவரது திருப்பாடுகளின் காட்சி யை மேடையேற்றும் முயற்சி வருடாந்தம் தபக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு அனுபவிக்கும் ஆற்றுகையாக இன்று வளர்ச்சி கண்டிருக்கிறது. அவர் 2021இல் அமரத்துவம் அடைந்தாலும் அவர் உருவாக்கிய திருமறைக் கலாமன்றம் அம்முயற்சியைத் தொடர்ந்து வருகிறது. (கி. செல்மர் எமில் (தொகு.), 2022 ப.3)

அவர் பல திருப்பாடுகளின் காட்சி எழுத்துருக்களை உருவாக்கியிருந்தாலும் அன்பில் மலர்ந்த அமர காவியம், பலிக்களம், களங்கம், சிலுவை உலா, கல்வாரிப் பரணி, கல்வாரிக் கலம்பகம், காவிய நாயகன், வேள்வித் திருமகன் ஆகிய எட்டு ஆக்கங்களும் அச்சு வாகனம் ஏறியுள்ளன.

### அடிகளாரின் பாடுகளின் காட்சிகளில் சமய சமூக அறிவுருவாக்கம்

அறிவுருவாக்கம் என்னும் சொல்லை நாம் பயன்படுத்தினாலும் முழுமையான அறிவு என்பது உணர்வோடும் இணைகின்ற பொழுதுதான் அது செயலை நோக்கி மனிதனை உந்த வல்லதாக மாறுகின்றது. ஆற்றுகைக் கலைகளின் அறிவுருவாக்கத்தில் இவ்விணைவு சிறப்பாகக் காணப்படுகின்றது.

மரியசேவியர் அடிகளாரின் திருப்பாடுகளின் நாடகங்களிலும் இவ்விணைவை நாம் தெளிவாக காண முடியும். "கல்வாரிக் கலம்பகம்" என்னும் நாடகம் இவ்வாறு ஆரம்பிக்கின்றது. விமானக் குண்டுத்தாக்குதல் நடக்கின்றது - புகை மண்டலம் கிளம்புகிறது - அவலக் குரல்கள் ஒலிக்கின்றன. மக்கள் அங்கும் இங்குமாகச் சிதறி ஓடுகின்றனர். இது அந்த ஆற்றுகையின் முதல் காட்சி.

அந்த அவலப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து ஒரு மனிதன் எழுந்து வருகின்றான். அவன் கடவுளிடம் வழக்குத் தொடுக்கின்றான். கடவுளே நீ வாழ்ந்தால் நீ வாழ்வது வான் வீட்டில் அன்று சாக்காட்டில்! நீ விளைவிப்பது இன்பம் அன்று துன்பம்! நீ அளிப்பது அருள் அன்று இருள்! (நீ. மரியசேவியர் 1994, ப.3) ஈழத்தமிழ் மக்கள் அனுபவிக்கும் பெருந்துன்பங்களை பட்டியலிடும் அவன் கடவுளிடம் வழக்குத் தொடுக்கின்றான்.

அதே பாதிக்கப்பட்ட மக்கள் மத்திலிருந்து ஒரு பக்தன் எழுகின்றான். அவன் இவ்வழக்குக்கு விடை தர முயல்கின்றான். அவன் உரைஞராக மாறுகின்றான். வழக்குக்கான விடைதேடும் முயற்சியாகவே நாடகம் நீள்கிறது.

இங்கு இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும். முதலாவதாக கிறிஸ்தவ சமய அறிவூட்டல் நிகழ்வாக மேடையேற வேண்டிய திருப்பாடுகளின் காட்சியை போரின் மத்தியில் வாடும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வுக்கான தேடலாக இவர் மாற்றி விடுகின்றார். இரண்டாவதாக அவலச் சுவையை வெளிக்கொணரும்

காட்சிப்படுத்தலூடாக உணர்வையும் அறிவையும் கலந்து தமது படைப்பின் மூலம் சிறந்த சமய சமூக அறிவுருவாக்கத் திற்கான களத்தை அவர் திறந்துவிடுகிறார். இதனால்தான் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல பெருந்தொகையில் இந்துக்களும் கலந்து அனுபவிக்கும் நிகழ்வாக இது யாழ்ப்பாண மண்ணில் அவதாரம் எடுத்தது.

"சிலுவை உலா" என்கிற நாடகம், இது சிலுவையிலிருந்து இயேசு பேசிய ஏழு வசனங்களை மையப்படுத்தியதாக நகர்கிறது. நாலாவது காட்சியில் இயேசு கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கை விட்டீர் என சிலுவையிலிருந்து உரத்துக் கூவுகிறார். இவ்வசனம் முடிய ஒருவன் சிலுவையை நோக்கி ஓடி வருகிறான், யாராவது வருகிறார்களா எனப் பார்க்கிறான் பின்பு பேசுகிறான், என்ன யாருமே வரவில்லையே! அன்று மட்டுமல்ல இன்றும் இப்பொழுதும் இந்த அழுகைக் குரலுக்கு செவிமடுப்பவர் யாருமில்லையா? ஐயகோ! தெய்வமே!! பின்பு கேட்கும் அசரீரி ஒன்று இது திருப்பாடல்களின் ஒரு வரி என்று சமய அறிவுரை தருகிறது. தொடர்ந்தும் அசரீரி பேசுகின்றது. இயேசு எழுப்பிய அழுகுரல் வரலாற்றில் ஒலித்துக் கொண்டு வந்துள்ள அவலக்குரல்; அது ஏழை எளியவரின் அபயக்குரல்; ஒடுக்கி நசுக்கப்படுபவரின் ஒடுங்கல் குரல்; இங்கும் எங்கும் இன்றும் முதலாக ஒலித்துக் கொண்டிருக்கிற சோகக் குரல். (நீ. மரியசே வியர், *1995. ப. 11)*

இந்நாடகம் மேடையேற்றப்பட்ட ஆண்டு *1991;* ஈழந்தமிழர்கள் எங்கும் எப்போதும் குண்டுமழை பொழியலாம் எனப் பயந்திருந்த காலம். இதனைத் தொடர்ந்து பின்னணியில் வானொலிச் செய்தி வாசிக்கப்படுவது போன்ற தொனியில் ஈழத் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு துயரச்செய்திகள் ஒலிக்கும். பின்பும் அசரீரி தொடரும் இச்செய்திகளின் ஊடாக இயேசுவின் வேண்டுதல் எதிரொலிக்கவில்லையா? *(நீ. மரியசேவியர், 1995. ப. 12)*

இவ்வாறு வினாவை எழுப்பி தொடரும் ஈழத்தமிழர்களின் துன்பத்துக்கு இயேசுவில் விடை தேட அழைப்பு விடுக்கும் நாடகம் தொடரும் பாடலிலே துன்ப வேளையிலும் இயேசுவைப்போல நம்பிக்கை இழக்காதிருந்தால் இறைவன் பிள்ளையைத் தந்தை அரவணைப்பது போல நம்மையும் அணைத்துக் கொள்வார் என்று நம்பிக்கையூட்டுகிறது.

போரிலே அவலப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஒரு நல்ல ஆற்றுகையினூடாக சமய சமூக அறிவூட்டத்தைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதற்கு சிலுவை உலா ஒரு சான்று.

மேலும் 2012 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட வேள்வித்திருமகன் நாடகம் சமகால வாழ்வியல் சோகங்களை வெளிப்படுத்துவதுடனேயே ஆரம்பித்தது. முள்ளிவாய்கால் அவலங்களை படிம நிலையில் வெளிப்படுத்துவதாகவதாகவே இந்த ஆற்றுகை ஆரம்பிக்கின்றது. அதற்குப் பின்னணியாக அமைந்த பாடல் ஈழத்தமிழரின் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் அவலங்களை அவலச் சுவையோடு தெளிவாக வெளிப்படுத்தியது.

கண்ணீரில் துடித்தோம் செந்நீரில் குளித்தோம்! புண்பட்டுப் புதைகுளியுள் நன்நீரின்றி மடிந்தோம் ! அன்னையரை இழந்தோம் ! தந்தையரைப் பிரிந்தோம் இன்னமுதுப்பிஞ்சுகளும் வெந்த துயர் அறிந்தோம் ! என்ன பிழை செய்தோம் நாம் இறைவா -பெரும்

இன்னல்களில் நோவதென்ன முறையா? *(நீ. மரியசேவியர், 2012, ப. 4)*

இவ்வாறு ஆரம்பித்த ஆற்றுகை நிறைவில் துன்ப துயரங்கள் யாவும் இறைமகன் இயேசுவின் பாடுகளோடு இணைக்கப்படுகின்றபோது அவை விடிவைத் தருவதாக அமையும் என்ற நம்பிக்கையோடு நிறைவுறுகின்றது.

திருப்பாடுகளின் காட்சி வழியான மரியசேவியர் அடிகளாரின் அறிவுருவாக்க முயற்சியில் அவரது "காவிய நாயகன்" படைப்பு இன்னுமொரு தளத்தில் இயங்குகிறது. இதனது முதலாவது களம் மூன்று மனிதர்களின் தேடலோடு தொடங்குகிறது. இத்தேடல் நாங்கள் ஏற்கனவே பார்த்த தேடல் தடங்களைக் கடந்து உலக அறிவியல் தளத்தில் இயங்குகின்றது. முதலாவது மனிதன் இறைவன் இறந்து விட்டார் என்றுரைத்த நீட்சே, இறைவா நீ இருக்கின்றாயா எனக் கேள்வியெழுப்பிய அல்பேட் கமியூ போன்றோரின் இறைவனின் இருப்புப்பற்றிய கேள்வியோடு வருகின்றான். இரண்டாவது மனிதன் கிட்லரின் யூதப் படுகொலையின் அவலங்களோடு தொடங்கி வரலாற்றில் மனிதன் செய்த அநீதச் செயல்களை விரித்து ரைத்து மனிதன் இருக்கின்றானா என்ற வினாவுடன் வருகின்றான். மூன்றாவது மனிதன் இவ்வுலகில் மனிதம் எங்கே இருக்கின்றது என்று வினாவெழுப்பி மனிதம் பற்றிய எமது கருத்துருவாக்கம் கனவா கற்பனையா என வினாவெழுப்பி மனிதத்தின் இருப்பை தேட முனைகின்றான். இத்தேடலாக நகரும் இவ்வாற்றுகை இயேசுவை மனிதத்தின் நாயகனாக சித்திரித்து நம்மில் மனிதம் உயிர்த்து விட்டதா என்ற வினாவோடு முடிவடைகின்றது.

## முடிவாக

உள்ளூர் மக்களின் அவலம் முதல் மனித குலத்தின் இருப்பியல் அவலம் வரை மரியசேவியர் அடிகளாரின் அறிவுத் தேடலாக அவரது திருப்பாடுகளின் ஆற்றுகைகள் விரிவடைந்துள்ளன. வெறுமனே கிறிஸ்தவ சமய அறிவூட்டும் திருப்பாடுகளின் காட்சிகளாக மட்டுமல்லால் கேள்விகளை எழுப்பி சமகால சமூக பிரச்சினைகளுக்கும் விடைகாண முயலும் அவரது அறிவுருவாக்க முயற்சியை வெளிப்படுத்தும் படைப்புக்களாக இவை உயர்ந்து நிற்கின்றன.

## துணைநூற்பட்டியல்

1. மரியசேவியர், கல்வாரிக் கலம்பகம், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 1994.
2. மரியசேவியர், சிலுவை உலா, திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 1995.
3. மரியசேவியர், காவிய நாயகன், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 2004.
4. மரியசேவியர், வேள்வித் திருமகன், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 2012.
5. பிலேந்திரன், கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 2001.
6. கி. செல்மர் எமில் (தொகு.), மரியசேவியம், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், 2022.